## அட்சரகணிதக் கோவை அமைத்தலும் பிரதியிடலும்

உதாரணம்: ஷர்மிலாவிடம் இருந்த பேனாவின் எண்ணிக்கையுடன் மேலும் தங்கை 5 பேனாக்களைக் கொடுத்தால் தற்போது ஷர்மிலாவிடம் உள்ள பேனாக்களின் எண்ணிக்கையைக் காண்க.

ஷாமிலாவிடம் இருந்த பேனாக்களின் எண்ணிக்கை தெரியாக்கணியமாதலால் அதற்கு x எனக்கொள்வோம்.

தங்கை கொடுத்த 5 ஐச் சேர்த்தால் = $x + 5$ (இது தற்போதுள்ள பேனாக்களின் எண்ணிக்கையாகும்.)

இதனையே அட்சரகணிதக் கோவை என்போம்.

**தரப்பட்ட அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| | முதலாம் உறுப்பு | இரண்டாம் உறுப்பு | முதலுறுப்பையும் இரண்டாம் உறுப்பையும் கூட்டுவதால் பெறப்படும் அட்சகணிதக் கோவை |
|---|---|---|---|
| I. | 30 | x | |
| II. | x | 8 | |
| III. | y | 12 | |
| IV. | 20 | n | |
| V. | P | 9 | |

கீழுள்ள கூற்றுக்களுக்கு கோவையை அமைக்க.

I. சமீம் தன்னிடமிருந்த 20 ரூபாவில் தம்பிக்கு x ரூபா கொடுத்தால் தற்போது சமீமிடமுள்ள பணத்தின் கோவை யாது? ……………………………………………………………………………………

II. பாத்திமா 5 மாம்பழங்களை வைத்திருந்தாள். மேலும் P எண்ணிக்கையான பழங்களை தாய் கொடுத்தால் அவளிடமுள்ள மொத்தப்பழம் ……………………………………………………………….

III. நிர்மலாவிடமுள்ள 50 ரூபா பணத்தில் 1kg சீனி x ரூபாவிற்கு வாங்கிய பின் அவளிடம் எஞ்சும் பணத்தின் கோவை யாது?

IV. வகுப்பிலுள்ள Y எண்ணிக்கையான மாணவர்களுடன் புதிதாக 10 மாணவர்கள் சேர்ந்தால் வகுப்பில் தற்போதுள்ள மாணவர்களின் கோவை ……………………………………………………………..

தரப்பட்ட அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| | முதலாம் உறுப்பு | இரண்டாம் உறுப்பு | இரண்டாம் உறுப்பிலிருந்து முதல் உறுப்பைக் கழிப்பதால் பெறப்படும் அட்சர கணிதக் கோவை |
|---|---|---|---|
| I. | 75 | x | |
| II. | y | 100 | |
| III. | p | 40 | |
| IV. | 15 | n | |
| V. | m | 150 | |